Agaram.LK - Keep your dreams alive!

FWC

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

**தவணைப் பரீட்சை, நான்காம் தவணை- 2021**

**Field Work Centre, Thondaimanaru**

**4th Term Examination - 2021**

| | | |
|---|---|---|
| புவியியல் - I<br>Geography - I | Three Hours<br>Gr. 13 (2021) | 22 T I |

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடம்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I, 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் மூன்று வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றிற்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப் பட வேண்டும்

## பகுதி - I

- **ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01. புவியின் உண்மையான நிலத்தோற்றத்தில் காணக் கூடிய பௌதிக, பண்பாட்டு அம்சங்களை ஒரு அளவுத் திட்டத்திற்கு ஏற்ப வரைந்து காட்டுகின்ற படம் எது?
(1) புவியின் தரைத்தோற்றப் படங்கள்
(2) உலகின் அரசியல் பிரிவுப் படங்கள்
(3) இலங்கையின் நீர்ப்பரம்பல் படங்கள்
(4) உலகின் இயற்கைத் தாவரப் பரம்பல் படங்கள்
(5) உலக சனத்தொகைப் பரம்பல் படங்கள் (..........)

02. பின்வரும் விடைகளில், இடம்சாரா தரவுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) பயிர் பரம்பல், வீதிகள், நதிகள்
(2) நாடு ஒன்றின் அமைவு, உலகசனத்தொகை அளவு, நகரம்
(3) பயிர்நிலங்களின் அளவு, வீதிகளின் நீளம், உலகசனத்தொகை அளவு
(4) பயிர்பரம்பல், வீதிகள், நதிகள்
(5) வீதிகளின் நீளம், பயிர்பரம்பல், நாடு ஒன்றின் அமைவு (..........)

03. புவி மேற்பரப்பின் உயரவேறுபாடுகளை தெளிவாக எடுத்துக் காட்டுவதற்குப் பயன்படுவது
(1) இடவுயரம்
(2) திருகோண கணித நிலையம்
(3) தரைத்தோற்ற வேறுபாடுகள்
(4) சமவுயரக் கோடுகள்
(5) இடக்கணிய வரைபுகள் (..........)

04. இலங்கையின் 1:50,000 இடவிளக்கப்படம் ஒன்றில் 6 சென்ரிமீற்றரினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள ஜீப் வண்டிப் பாதையின் உண்மையான நீளம் கிலோ மீற்றரில்
(1) 3 கிலோ மீற்றர் (2) 8 கிலோமீற்றர் (3) 12 கிலோ மீற்றர்
(4) 14 கிலோ மீற்றர் (5) 15 கிலோ மீற்றர். (..........)



agaram.lk

05. புவியியல் தகவல் முறையின் (GIS) இரண்டு வெளியீட்டு மூலகங்களைத் தரும் தெரிவு யாது?
(1) காந்த இறுவட்டு, அச்சு உபகரணம்
(2) விசைப்பலகை, வருடிகள்
(3) எண்ணிலக்கமாக்கும் கருவி, திரை
(4) காந்த இறுவட்டு, எண்ணிலக்கமாக்கும் கருவி
(5) திரை, அச்சு உபகரணம் (……….)

06. காவித்தரவில் பல்கோணி ஒன்றின் மூலம் எடுத்துக் காட்டப்படும் அம்சம் எது?
(1) கட்டடம் (2) கிணறு (3) நீர்த்தேக்கம்
(4) வீதி (5) கால்வாய் (……….)

07. அனுராதபுர மாவட்டத்தில் உள்ள குளங்களின் எண்ணிக்கை
(1) தொடர்ச்சியற்ற தரவு ஆகும்
(2) தொடர்தரவு ஆகும்
(3) முதல்நிலைத் தரவு ஆகும்
(4) பண்புசார் தரவு ஆகும்
(5) கூட்டமாக்கப்பட்டதரவு ஆகும். (……….)

08. இலங்கையின் 1: 50,000 இடவிளக்கப்படங்களில் அதிவேக நெடுஞ்சாலையைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம் யாது?
(1) சிவப்பு (Red) (2) மஞ்சள் (Yellow) (3) பச்சை (Green)
(4) கறுப்பு (Black) (5) கத்தரிப்பூ (Violet)

09. செய்மதியூடாக துல்லியமாகவும், தெளிவாகவும் நிலப்பகுதியை அளவிடுவதற்கும், அடையாளப்படுத்துவதற்கும் உதவுகின்ற ஒரு நவீன படவரைகலையியல் முறை
(1) ராடர் முறைமை ஆகும்
(2) தரவுத்தள முகாமைத்துவ முறைமையாகும்
(3) புவியியல் தகவல் முறைமை ஆகும்
(4) தொலையுணர்வு முறைமை ஆகும்
(5) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை ஆகும். (……….)

10. கருப்பொருள் படங்களின் விசேட பண்பு யாது?
(1) ஒரு கருப்பொருளை மட்டும் விபரிப்பது
(2) பல தகவல்களை படைகளாகக் காட்டக் கூடியதாக இருப்பது
(3) பௌதிக, பண்பாட்டு அம்சங்களின் இடைத்தொடர்புகளை எடுத்துக் காட்டுவது
(4) புவியியல் ரீதியான இணைவினை எடுத்துக்காட்டக்கூடியதாக இருப்பது
(5) படப்பகுதியின் விபரங்களை நிரைகள், நிரல்கள் ஊடாக எடுத்துக்காட்டக் கூடியதாக இருப்பது (……….)

11. பின்வருவனவற்றிலிருந்து கற்கோளத்தின் உபபிரிவுகளை உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவு செய்க.
(1) சமுத்திரப் படுக்கைகள், மலைத்தொடர்கள், பாறைகள்
(2) மண், கண்டத்திணிவுகள், மாறன்மண்டலம்
(3) மாறன் மண்டலம், படைமண்டலம், இடைமண்டலம்
(4) சமுத்திரப்படுக்கைகள், முகில்கள், நீராவி
(5) வெப்பமண்டலம், படைத்தரிப்பு எல்லை, மண் (……….)

12. சூழல் நழுவு வீதம் என்பது
(1) கடல் மட்டத்திலிருந்து ஒவ்வொரு 100 மீற்றருக்கும் 6.4C வெப்பநிலை வீழ்ச்சியடைதல்
(2) கடல் மட்டத்திலிருந்து ஒவ்வொரு 1000 மீற்றருக்கும் 6.4C வெப்பநிலை வீழ்ச்சியடைதல்
(3) சூழல் மாசடைதல் வீதம்
(4) புவியின் உயரமுக்க வலயங்களிலிருந்து தாழமுக்க வலயங்களை நோக்கி காற்று வீசுவது
(5) ஆவியாக்கத்தினைவிட கூடுதலான படிவு வீழ்ச்சி காணப்படுவது. (……….)



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

13. ஆறு, காற்று, பனிக்கட்டியாறு, கடலலை போன்ற புறவிசைக் கருவிகளின் அரித்தலினால் உருவாக்கப்பட்ட நிலவுருவங்கள் முறையே
(1) கூர்நுனி உச்சி, நட்சத்திரக்குன்றுகள், வட்டக் குகை, ஓங்கல்
(2) வெள்ளச்சமவெளி, பார்க்கன் குன்றுகள், இடைப்படிவு, மணற்குன்றுகள்
(3) பானைக்குழிவு, யடாங்கு, செம்மறியுருப்பாறை, ஓங்கல்
(4) பனியெருத்தேரி, தளத்திடைக்குன்று, கூம்பகச் சிகரம், முனை
(5) அடர்சேறு, முனைவுப்படிவு, பார்ககன்குன்று, அலைவெட்டியமேடை (..........)

14. எரிமலை கக்குகையினால் உருவாகின்ற தள்ளல் நிலவுருவங்களைத் தருகின்ற விடை
(1) வில்லைத்தீப்பாறை, எரிமலைவாய், பாதாளக்கற்குகை
(2) ஆட்பிளவுக் கற்குகை, எரிமலைக்கழுத்து, லாவக்கூம்பு
(3) வில்லைத்தீப்பாறை, கிடைத்தீப்பாறை, சீதர்மரத்தீப்பாறை
(4) கூட்டு எரிமலை, குழிவுத் தீப்பாறை, குமிழ்தீப்பாறை
(5) சாம்பல் கூம்பு, எரிமலைக்கூம்பு, லாவாக்கூம்பு (..........)

15. பின்வருவனவற்றில் எது காற்று கொண்டு செல்லும் மூன்று முறைகளைத் சரியாகத் தருகின்றது.
(1) தொங்கல், இழுத்தல், பாச்சல்
(2) உராய்தல், தேய்தல், கரைசல்
(3) காவிச் செல்லல், தாவிக்குதித்துச் செல்லல், இழுத்துச் செல்லல்
(4) உராய்தல் இழுத்தல், கரைசல்
(5) இழுத்தல், தேய்தல், தொங்கல் (..........)

16. கழுவு நீரோட்டத்தினால் ஏற்படும் விளைவுகளில் ஒன்று
(1) அதிகரித்த ஆவியாக்கம் ஏற்படும்
(2) பனிப்பாறைகள் உருகும்
(3) மழைக்காடுகள் அதிகரிக்கும்
(4) ஆறுகளின் போக்குகளில் மாற்றம் ஏற்படும்
(5) அமிலமழைப் பொழிவு எற்படும் (..........)

agaram.lk

17. வெப்பநீரோட்டம் என்பது
(1) காற்று, வெப்பநிலை மாறுபாடுகளால் கடலில் ஏற்படுகின்ற அலையின் நீரோட்டம்
(2) அயனவலய சமுத்திரங்களில் இருந்து உயர் அகலக்கோடுகளின் சமுத்திரங்களை நோக்கிச் செல்லும் நீரோட்டம்
(3) உயர் அகலக்கோட்டுப் பிரதேசங்களிலிருந்து அயன வலய சமுத்திரங்களை நோக்கி வருகின்ற நீரோட்டம்
(4) சமுத்திரத்தின் ஆழத்தில் பரந்து செல்லும் நீரோட்டம்
(5) நீரோட்டம் கடலலையின் உயரம் அதிகரிக்கும் போது ஏற்படும் சுழற்சி காரணமாக உருவாகும் நீரோட்டம் (..........)

18. வளிக்கோளத்தின் இரண்டாம் நிலைச் சுற்றோட்டத்தில் உள்ளடங்குபவை
(1) வியாபாரக் காற்று (2) மேலைக்காற்று (3) பருவக்காற்று
(4) கடல்காற்று (5) சூறாவளிகள் (..........)

19. கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டிற்கு அடிப்படையாக அமைந்த விடயங்கள்
(1) குறித்த பிரதேச வெப்பநிலை, மழைவீழ்ச்சியின் பொதுப் பெறுமானங்கள்
(2) குறித்த பிரதேச வெப்பநிலை தாவரப்பரம்பலின் வேறுபாடு
(3) குறித்த பிரதேசத்தின் தாவரப் பரம்பல், மழைவீழ்ச்சியின் பொதுப்பெறுமானம்
(4) குறித்த ஒரு பிரதேசத்தின் மழைவீழ்ச்சி ஆவியாக்கவீதம்.
(5) குறித்த பிரதேசத்தின் ஆவியாக்க, ஆவியுயிர்ப்பு, தாவரப்பரம்பலின் வேறுபாட்டினடிப் படை. (..........)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

20. இலங்கையில் சூறாவளியின் செல்வாக்கு அதிகமாகக் காணப்படும் மாதங்கள்
(1) மே – செப்ரம்பர் (2) ஒக்டோபர் - நவம்பர் (3) டிசம்பர் - பெப்ரவரி
(4) யூன் - யூலை (5) நவம்பர் - டிசம்பர் (..........)

21. காலநிலை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் மானிடக் காரணிகள்
(1) சூரியக் கரும்புள்ளி, கைத்தொழில் வளர்ச்சி, சுவட்டு எரிபொருள் தகனம்
(2) காடழிப்பு, சுவட்டு எரிபொருள் தகனம், கைத்தொழில் வளர்ச்சி
(3) எரிமலைவெடிப்பு, சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலை மாற்றம், சூரியக் கரும்புள்ளி
(4) கைத்தொழில் மயமாக்கம், எரிமலைவெடிப்பு, காடழிப்பு
(5) காடழிப்பு, எரிமலை வெடிப்பு, எல்நினோ (..........)

22. இலங்கையில் அதிகளவு நீரினை வீண்விரயம் செய்கின்ற மூன்று ஆறுகளைத் தரும் விடை
(1) மகாவலிகங்கை, மீஓயா, வளவகங்கை
(2) மகாஓயா, மாணிக்க கங்கை, கல்லோயா
(3) ஜின் கங்கை, களனி கங்கை, தெதுறு ஓயா
(4) மகாவலி கங்கை, கலாஓயா, மல்வத்து ஓயா
(5) கல்ஓயா, கிரந்தி ஓயா, மாதுறுஓயா (..........)

23. பின்வரும் நாடுகளில் பிரதானமாகப் பரந்துள்ள இடைவெப்பப் புல்வெளிகளின் பெயர்களை ஒழுங்குமுறையாகத் தருகின்ற விடையைத் தெரிவு செய்க.
(1) கம்பொஸ், லானோஸ், சவன்னா
(2) பம்பாஸ், டவுண்ஸ், வெல்ட்
(3) லாலோஸ், பம்பாஸ், வெல்ட்
(4) ஸ்ரெப்பீஸ், பிறேயரிஸ், சவன்னா
(5) டவுண்ஸ், வெல்ட், பிறேயரிஸ் (..........)

24. கண்டங்களின் கரையோரங்களைப் பிரதானமாகக் கொண்டு அதிகளவில் பரந்துள்ள உயிர் பெருந்திணிவு எது?
(1) அயன மழைக்காடுகளின் உயிர்பெருந்திணிவு
(2) இடைவெப்ப வலயக்காட்டு உயிர்பெருந்திணிவு
(3) தைக்கா உயிர்பெருந்திணிவு
(4) மத்தியதரைக் காடுகளின் உயிர்பெருந்திணிவு
(5) பாலைவன உயிர்பெருந்திணிவு (..........)

25. அயனவலயக் காட்டு உயிர்பெருந்திணிவுகளின் உயிர்ப்பல்வகைமையில் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற பிரதான கைத்தொழில்
(1) சுரங்கம் அகழ்தல் கைத்தொழில்
(2) வெட்டுமரக்கைத்தொழில்
(3) இலத்திரனியல் கைத்தொழில்
(4) பாற்பண்ணைக் கைத்தொழில்
(5) மோட்டார் வாகனக்கைத்தொழில் (          )

26. சனத்தொகைக் கட்டமைப்பின் பிரதான அலகுகள்
(1) பிறப்பு, இறப்பு
(2) பிறப்பு, இடப்பெயர்வு
(3) வயது, பால்
(4) குடியகல்வு, குடிவரவு
(5) ஆயுட்காலம், சிசு மரணவீதம் (          )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

27. குடித்தொகைக் கட்டமைப்பின் ஆரம்பக் கட்டத்தில் தெளிவாகத் தெரியும் பண்பு
(1) பிறப்புவீதம், இறப்பு வீதம் அதிகம்
(2) பிறப்பு வீதம் உயர்வு, இறப்பு வீதம் குறைவு
(3) இறப்பு வீதம் உயர்வு, மத்திய வயதுப்பிவினர் குறைவு
(4) இறப்பு வீதம் உயர்வு, முதியோர் தொகை அதிகம்
(5) பிறப்பு, இறப்பு வீதம் குறைவு, ஆயுள் எதிர்பார்ப்பு அதிகம் (..........)

28. இலங்கையில் குடித்தொகை வளர்ச்சி வீதம் அதிகமாகவுள்ள காலநிலை வலயம் எது?
(1) உயர் நில ஈரவலயம் (2) தாழ்நில ஈரவலயம் (3) அரைவரள் வலயம்
(4) இடைமாறு வலயம் (5) தாழ்நில உலர்வலயம் (..........)

29. வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து சென்ற இலங்கையர் அதிகமாக வசிக்கும் பிரதேசம் எது?
(1) தென்னாசியா (2) தென்கிழக்கு ஆசியா (3) மேற்கு ஐரோப்பா
(4) மத்திய கிழக்கு ஆசியா (5) கிழக்கு ஐரோப்பா (..........)

30. குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்துகின்ற பௌதிகக் காரணிகள் உள்ளடங்கிய விடையைத் தெரிக.
(1) உட்கட்டமைப்பு வசதி, நீர் வசதி, வளமான மண்
(2) நீர்வசதி, சமவெளி, காலநிலை
(3) காலநிலை, சேவை வசதிகள், போக்குவரத்து
(4) நீர்வசதி, வளமான மண், தொலைத்தொடர்பு,
(5) தொலைத்தொடர்பு, காலநிலை, வளமான மண் (..........)

31. இலங்கையின் நிர்வாக, கலாசார நகரங்கள் அடங்கிய விடைத் தொகுதியைத் தெரிக.
(1) கொழும்பு, அநுராதபுரம்
(2) கதிர்காமம், கண்டி
(3) ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, கண்டி
(4) ஸ்ரீ ஜெயவர்த்தனபுர, யாழ்ப்பாணம்
(5) கொழும்பு, ஸ்ரீஜெயவர்த்தனபுர (..........)

32. 2014 ஆம் ஆண்டளவில் 25 சதவீதத்திலும் குறைவான நகராக்கமட்ட வளர்ச்சி வீதத்தினைப் பெற்றிருந்த ஆசிய நாடுகள் மூன்றினைத் தரும் விடை
(1) இலங்கை, நேபாளம், கம்போடியா
(2) இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ்
(3) சிங்கப்பூர், ஜப்பான், தென்கொரியா
(4) இலங்கை, இந்தியா, நேபாளம்
(5) நோபளம், பூட்டான், சிங்கப்பூர் (..........)

33. வளிமாசடைதலுக்குக் காரணமான வாகனங்களில் இருந்து வெளிவரும் மாசுக்கள்
(1) காபன், ஈயம், ஒட்சிசன்
(2) காபன், காபன்மொனோக்சைட், ஈயம்
(3) நைதரசன், மீதேன், ஈயம்
(4) காபனீரொட்சைட், நைதரசன் ஒக்சைட், காபன் மொனோக்சைட்
(5) ஒட்சிசன், காபனீரொட்சைட், மீதேன் (..........)

34. மண்ணில் நைதரசன் பாதுகாக்கப்படல், நுண்ணங்கிகளின் செயற்பாடு அதிகளவில் இடம்பெறுதல், மண்மீளஊட்டம் பெறுதல் ஆகிய பண்புகள் காணப்படுகின்ற விவசாய முறை
(1) பசுமைப் புரட்சி
(2) மரபணு தொழில்நுட்பம்
(3) சேதன விவசாயம்
(4) பெருந்தோட்ட விவசாயம்
(5) ஜீவனோபாயப் பயிர்ச் செய்கை (..........)

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

35. இலங்கையில் பல்பொருள் அங்காடிகள் அதிகரித்தமை காரணமாக ஏற்பட்ட விளைவு
    (1) விவசாய, கைத்தொழில் உற்பத்திகளை ஓரிடத்தில் பெறமுடிந்தமை
    (2) சில்லறை வியாபாரிகள் நஷ்டமடைந்தமை
    (3) தனியார், அரசதுறையினர் ஈடுபடுகின்றமை
    (4) பொருள் விற்பனை தொடர்பாக விசேட திட்டங்கள் காணப்படுகின்றமை
    (5) நுகர்வோருக்குத் தேவையான பல்வேறு சேவைகள் வழங்கப்படுகின்றமை (..........)

36. கனிய எண்ணெய் வர்த்தகத்தில் பிரதான உற்பத்தி மற்றும் இறக்குமதி செய்யும் நாடுகள் அடங்கிய விடை
    (1) ஐக்கிய அமெரிக்கா, சீனா
    (2) ஐக்கிய அமெரிக்கா, கனடா
    (3) இந்தியா, ஜேர்மனி
    (4) இத்தாலி, ஸ்பெயின்
    (5) ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா (..........)

37. நிலக்கரி உற்பத்தியாகியது எனப் புவிச்சரித வியலாளர்களால் கருதப்படும் யுகம்
    (1) பிளைத்தோசின் காலம்
    (2) மயோசீன் காலம்
    (3) கார்போனி பரஸ் காலம்
    (4) யுராசிக் காலம்
    (5) டோவேனியன் காலம் (..........)

38. இலங்கையின் கனிய வளங்களின் பரம்பல் தொடர்பான சரியான கூற்று
    (1) இலங்கையில் இரும்பத்தாதுப்படிவு அதிகளவில் பரந்துள்ளது
    (2) இலங்கையில் கைத்தொழில் கனியங்கள் அதிகளவில் பரந்து இருந்தாலும் சக்தி வளக் கனியங்களின் பரம்பல் குறைவானதாகக் காணப்படுகின்றது.
    (3) இலங்கையில் சக்திக் கனியங்களின் பரம்பல் அதிகளவில் காணப்படுகின்றது.
    (4) இலங்கையில் பரந்துள்ள பல கனியங்கள் உலக சந்தையில் அதிக கேள்வி உடையவையாகும்.
    (5) இலங்கையில் கனிய வளப்பரம்பல் மிகமிகக் குறைவாகும். (..........)

39. தற்காலத்தில் உலகின் உற்பத்திக் கைத்தொழிலின் அமைவிடத்தில் அதிக செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்
    (1) மூலப்பொருள், மூலதனம்
    (2) சக்திவளம், மூலப்பொருள்
    (3) மூலப்பொருள், சந்தை
    (4) மூலதனம், அரசகொள்கை
    (5) சந்தை, போக்குவரத்து

40. பின்வரும் காரணிகளில் மானிட மூலதனத்தினை மட்டும் கொண்ட விடைத்தெரிவு யாது?
    (1) நிதி, இயந்திரம், கட்டடங்கள்
    (2) தனிநபர் ஆற்றல், நிதி, திறமைகள்
    (3) தனிநபர் ஆற்றல், ஆக்கத்திறன், பயிற்சி
    (4) பயிற்சி, தேர்ச்சி, உபகரணங்கள்
    (5) உழைப்பு, இயந்திரம், ஆக்கதிறன்

(40 x 1 = 40 புள்ளிகள்)



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

# பகுதி - II

**அறிவுறுத்தல்கள்:**
- பகுதி II இரண்டில் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் மூன்று வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக இலங்கையின் 1: 50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும், உலகப்புறவுருவப்படமும் வழங்கப்படும்

1) இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட **1: 50000** என்னும் அளவுத் திட்டத்திலமைந்த இடவிளக்கப் படத்தின் ஒருபகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தின் சமவுயரக்கோட்டு இடைவெளி **20** மீற்றரினால் காட்டப்பட்டுள்ளது. இப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களிற்கு விடை எழுதுக.

**குறிப்பு :**
- ✶ படத்தில் விடைகள் எழுதப்படலாகாது.
- ✶ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.
- ✶ உமது விடைத்தாளுடன் இடவிளக்கப் படத்தினை இணைக்க வேண்டாம்.

(i) படத்தில் காட்டப்பட்டுள்ள மாகாணம், மாவட்டம் என்பவற்றினைத் தருக. *(01 புள்ளி)*

(ii) 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்டிருக்கும் பௌதிக, பண்பாட்டம்சங்களைப் பெயரிடுக. *(03 புள்ளிகள்)*

(iii) படப்பிரதேசத்தில் காணப்படும் விவசாய நிலப்பயன்பாட்டு வகைகள் நான்கினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

agaram.lk

(iv) படத்தில் A,B,C,D என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்பட்டிருக்கும் அம்சங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(v) படப்பிரதேசத்தில் விருத்தி செய்யக் கூடிய இரண்டு கைத்தொழில்களைக் குறிப்பிடுக. *(01 புள்ளிகள்)*

(vi) படப்பகுதியின் வடமேற்குப் பகுதி மற்றும் தெற்குப்பகுதியில் காணப்படும் பயிர்ச்செய்கையின் பண்புகளை ஒப்பிட்டு விளக்குக. *(05 புள்ளிகள்)*

(vii) படப்பிரதேசத்தின் போக்குவரத்து, குடியிருப்புப் பரம்பல் தொடர்பாக மூன்று ஆதாரங்களுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

2) தரப்பட்டுள்ள உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) மிசூரி மிசுசிப்பி நதி

(ii) அயர் ஏரி

(iii) மெச்சிக்கோ நகரம்

(iv) எட்னா எரிமலை

(v) 80° கிழக்கு நெடுங்கோடு



agaram.lk

(vi) வெல்ட் புல்வெளி

(vii) அந்தீஸ் மலைத்தொடர்

(viii) குறோசிவோநீரோட்டம்

(ix) ஐக்கிய நாடுகளின் சூழல் நிகழ்ச்சித்திட்டம் (UNEP)யின் தலைமையகம் அமைந்துள்ள நகரம்

(x) உயர்தரமான இரும்புத்தாதுப்படிவு காணப்படும் ஆசிய நாடு

## பகுதி - III

3) (i) செய்முறைப் புவியியலில் பயன்படுத்தப்படும் நுட்பமுறைகள் நான்கினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) தரவு என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(iii) கூட்டமாக்கப்பட்ட தரவு, கூட்டமாக்கப்படாத தரவுகள் என்பதனை உதாரணங்களுடன் விபரிக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) முதல் நிலைத் தரவுகள் சேகரிக்கப்படும் நுட்பமுறைகள் மூன்றினை விளக்குக. *(06 புள்ளிகள்)*

4) (i) நவீன படவரைகலையியல் நுட்ப முறைகள் இரண்டினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) மேலே (i) இல் பெயரிடப்பட்ட நுட்ப முறை ஒன்றின் பயன்பாடு, முக்கியத்துவம் தொடர்பாக இரண்டு காரணிகளின் அடிப்படையில் விபரிக்குக. *(05 புள்ளிகள்)*

(iii) இடம்சார்ந்த தரவு, இடம்சாராதரவு உதாரணத்துடன் விளக்குக. *(03 புள்ளிகள்)*

(iv) நவீன படவரைகலையின் பொது இயல்புகளை மூன்று கரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(05 புள்ளிகள்)*

5) (i) இடவிளக்கப்படம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) இடவிளக்கப்படங்களின் பயன்பாட்டினை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விபரிக்குக. (04 புள்ளிகள்)

(iii) இடவிளக்கப்படங்களின் முக்கியத்துவத்தினை இரண்டு காரணிகளின் அடிப்படையில் உதாரணங்களுடன் விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) கருப்பொருள் படங்களின் பயன்கள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2021
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2021

FWC

புவியியல் II
Geography II

Three hours

Gr -13 (2021)

22 | T | II

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடம்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

### பகுதி – I பௌதிகப் புவியியல்

1. (i) உலகில் காற்றரிப்பு இடம் பெறுகின்ற பிரதேசத்தின் பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   (ii) காற்றின் அரித்தல் செயல்முறைகள் மூன்றினை விபரிக்குக. (06 புள்ளிகள்)
   (iii) காற்றின் அரித்தல் செயல்முறையினால் உருவாக்கப்படும் மூன்று நிலவுருவங்களை விளக்கப்படங்களின் உதவியுடன் விபரிக்குக. (06 புள்ளிகள்)
   (iv) காற்றரிப்பின் படிதல் நிலவுருவங்கள் மூன்றின் உருவாக்கச் செயல்முறைகளை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

2. (i) புவியின் கற்கோளத்தில் காணப்படும் பிரதான தகடுகள் நான்கினைப் பெயரிடுக. (02 புள்ளிகள்)
   (ii) தகடுகள் அசைவிற்கு உட்படுகின்ற மூன்று முறைகளை விளக்கப்படங்களின் உதவியுடன் விபரிக்குக. (06 புள்ளிகள்)
   (iii) தகட்டு அசைவினால் ஏற்படும் மூன்று விளைவுகளை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) புவியின் அமுக்கவிசைத் தொழிற்பாட்டினால் உருவாகும் நிலவுருவங்கள் மூன்றினை விளக்கப்படங்களின் துணையுடன் விபரிக்குக. (06 புள்ளிகள்)

3. (i) வானிலை, காலநிலை என்பதனை வரையறை செய்க. (02 புள்ளிகள்)
   (ii) காலநிலையைக் கட்டுப்படுத்தும் மூன்று காரணிகளை உதாரணங்களுடன் விளக்குக.. (06 புள்ளிகள்)
   (iii) இலங்கை மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொள்கின்ற மூன்று வழிமுறைகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)
   (iv) காலநிலை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று மானிடக் காரணிகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

4. (i) தரைக்கீழ் நீர் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)
   (ii) நீர்வளத்தின் மிதமிஞ்சிய பாவனைக்கான மூன்று காரணிகளை இலங்கையை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)
   (iii) உலக நீர்வளத்தில் தாக்கம் செலுத்தும் மூன்று காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)
   (iv) நீர் மாசடைதலுக்குக் காரணமான இரண்டு இயற்கைக் காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

## பகுதி – II மானிடப்புவியியல்

5. அட்டவணை I இல் 2014 ஆம் ஆண்டிற்குரிய பருமட்டான பிறப்புவீதம் நாடுகள் ரீதியாகத் தரப்பபட்டுள்ளன.

**அட்டவணை I உலகின் பருமட்டமான பிறப்பு வீதம்**

| நாடுகள் | பிறப்பு வீதம் | நாடுகள் | பிறப்பு வீதம் |
|---|---|---|---|
| இலங்கை | 16.1 | பர்கினா பாசோ | 42.4 |
| ஜப்பான் | 8.1 | சம்பியா | 42.3 |
| நைகர் | 46.1 | சிங்கப்பூர் | 8.1 |
| பாகிஸ்தான் | 23.2 | ஐக்கிய அமெரிக்கா | 13.4 |
| உகண்டா | 44.2 | ஐக்கிய இராச்சியம் | 12.2 |
| மாலி | 45.3 | பங்களாதேஸ் | 21.6 |
| இந்தியா | 19.3 | தென்கொரியா | 8.3 |

மூலம் :- www.indexmundi.com

(i) "பருமட்டமான பிறப்பு வீதம்" என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள பருமட்டமான பிறப்பு வீதத் தரவுகளிலிருந்து இனங்காணக் கூடிய முனைப்பான அம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

(iii) அட்டவணையில் தரப்பட்ட தரவுகளில் ஆபிரிக்கக் கண்ட நாடுகளில் பிறப்பு வீதம் உயர்வாகக் காணப்படுவதற்கான மூன்று காரணிகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் பிறப்பு வீதம் குறைவடைந்து செல்வதற்கான மூன்று காரணங்களை விளக்குக. (06 புள்ளிகள்)

6. (i) மரபணுத்தொழில்நுட்பம் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) பசுமைப்புரட்சி சார்ந்த விவசாயத் தொழில்நுட்ப முறைகள் இரண்டினை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) சேதன விவசாயத்தில் பின்பற்றப்படும் மூன்று முறைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் விவசாயத்தில் விளைச்சலை அதிகரிப்பதற்காக மேற்கொண்ட மூன்று முறைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

7. (i) கிராக்குடியிருப்பு வகைகள் இரண்டினை பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) நகரம், கிராமக் குடியிருப்புக்களை வேறுபடுத்திக் காட்டும் மூன்று காரணிகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) இலங்கையில் நகரமயமாக்கத்துடன் இணைந்து காணப்படும் மூன்று பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையின் நகரமயமாக்கத்துடன் இணைந்து காணப்படும் சமூக, பொருளாதார பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட மூன்று நடவடிக்கைகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

8. (i) சுரங்கக் கைத்தொழில் என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii)a) சுரங்கக் கைத்தொழில் மூலம் அகழ்ந்தெடுக்கப்படும் நான்கு பிரதான கனியங்களைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

b) கனிய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நான்கு நாடுகளைத் தருக. (02 புள்ளிகள்)

(iii) தற்காலத்தில் சுரங்கக் கைத்தொழிலுடன் இணைந்து காணப்படும் மூன்று பிரச்சினைகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) இலங்கையில் கனிய வளப்பயன்பாட்டினால் ஏற்படுகின்ற மூன்று சூழல் பிரச்சினைகளை ஆராய்க. (06 புள்ளிகள்)



agaram.lk